பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 02 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** இந்தியா பொறுமையுடன் செயல்பட்டதால்தான் வரலாற்று சிறப்புமிக்க இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் சாத்தியமானதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2)** மத்திய சுகாதார திட்டங்களின் பயனாக மக்களின் மருத்துவச் செலவு பத்தாண்டுகளில் **62** சதவீதத்தில் இருந்து **39** சதவீதமாக குறைந்துள்ளது என்று சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

**3)** நாட்டின் வளர்ச்சிப்பணிகளில் தேசிய மாணவர் படையினர் ஈடுபட வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கேட்டுக்கொண்டுள்ளார்.

**4)** கொளத்தூரை அடுத்த அகரத்தில் ரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

**5)** மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் குஜராத் இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<>>>>>>

இந்தியா பொறுமையுடன் செயல்பட்டதால்தான் வரலாற்று சிறப்புமிக்க இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் சாத்தியமானதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசிய அவர், இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு சாதகமான பொருளாதார சூழ்நிலையை உருவாக்கித் தந்திருப்பதாக கூறினார்.

உலக வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் மத்திய அரசு திட்டமிட்ட அணுகுமுறையை கடைபிடித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு தொடர்பான விஷயங்களை சுட்டிக்காட்டி எதிர்க்கட்சிகள் மத்திய அரசை குறை கூறி வந்தபோதிலும், பொறுமையுடன் அமைதி காத்து, இந்திய — அமெரிக்க ஒப்பந்தத்தை வெற்றிகரமாக முடித்திருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

உலகளாவிய பொருளாதார வர்த்தக சூழ்நிலைகள் மாறி வருவதாக அவர் கூறினார்.

உலக நாடுகள் தற்போது இந்தியாவின் பக்கம் திரும்பியுள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருப்பது, நாட்டின் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சிக்கு மிகுந்த உத்வேகம் அளிக்கும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கணினி மென்பொருள் மற்றும் சேவைத் துறைகளின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இது அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் இளைஞர்கள், தொழில்முனைவோர் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை பிரதமர் திரு நரேந்திர மோடி உருவாக்கி தந்திருப்பதாகவும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் கலந்துகொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் திரு சிராக் பாஸ்வான், இந்தியா, அமெரிக்காவுடனும், ஐரோப்பிய யூனியனுடனும் வெற்றிகரமாக முடித்துள்ள வர்த்தக ஒப்பந்தங்கள், வர்த்தக

பொருளாதார ரீதியாக இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்தியிருப்பதாக குறிப்பிட்டார்.

<<<<<<<<>>>>>>

நாட்டின் மருத்துவ சிகிச்சைக்காக மக்கள் செலவழிக்கும் தொகை கடந்த பத்தாண்டுகளில் **62** புள்ளி ஆறு சதவீதத்தில் இருந்து, **39** புள்ளி நான்கு சதவீதமாக குறைந்துள்ளது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதை தெரிவித்த அமைச்சர், ஏழை எளிய மக்கள் அரசின் திட்டங்களின் மூலம், விலையில்லா மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்துப் பொருட்களை பெற்று வருவதாக கூறினார்.

மருத்துவத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் பற்றி குறிப்பிட்ட அமைச்சர், மாவட்ட மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல மையங்களுக்கு தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ், இலவசமாக மருந்துகள் வழங்கப்படுவதுடன், பரிசோதனைகளும் செய்யப்படுவதாக தெரிவித்தார்.

பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் மூலம், **60** முதல் **80** சதவீதம் வரை குறைந்த விலையில், மருந்துகளை வாங்கி பயன்பெறுவதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் **18** ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் மக்கள் ஆரோக்கியத் திட்டத்தின்கீழ், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும், விலையில்லா மருத்துவ சேவை வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

அமிரித் திட்டத்தின்கீழ், தனியார் நிறுவனங்களின் மருந்துகள் **50** சதவீதம் குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

தேசிய மாணவர் படையினர் நாட்டின் வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபட வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசு தின அணிவகுப்பில் தமிழகத்திலிருந்து பங்கேற்ற

மாணவர்களுடன் கலந்துரையாடிய ஆளுநர், மாணவர்கள் உயர்ந்தால் நாடு உயரும், தொழில்நுட்ப வளர்ச்சி பல மாற்றங்களை கொண்டுவரும் என்றும் தெரிவித்தார்.

புதிய தொழில்நுட்பங்களை கற்றுக்கொண்டு, ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மாணவர்கள் நேர மேலாண்மையை கடைபிடிக்க வேண்டும் என்றும், உடற்பயிற்சி செய்து ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்க வேண்டும் என்றும் ஆளுநர் திரு ஆர் என் ரவி கேட்டுக்கொண்டார்.

<<<<<<<<<>>>>>>

சென்னை கொளத்தூரை அடுத்த அகரத்தில் ரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையத்தை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

பல்வேறு நவீன மருத்துவ வசதிகளுடன் நான்கு தளங்களில் செயல்படும் வகையில் இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

டயாலிசஸ் சிகிச்சை, செயற்கை மூட்டு சிகிச்சை மையம், உடற்பரிசோதனைக்கான நவீன கருவிகள் மற்றும் உள்நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு 15 படுக்கைகள் கொண்ட தனிமைப்படுத்தப்பட்ட அறைகள் உள்ளிட்டவை இம்மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளன.

கொளத்தூர் தொகுதியில் ஆறு நியாயவிலைக் கடைகளையும், ரெட்டேரி சந்திப்பில் உள்ள ஏரிக்கரை பூங்காவையும் அவர் இன்று திறந்துவைத்தார்.

**310** மின்மாற்றி கட்டமைப்புகளுக்கான பாதுகாப்பு வசதியை ஏற்படுத்தித் தருவதற்கும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

<<<<<<<<>>>>>>

தாயின் கருவில் பாலின தேர்வை தடை செய்யும் சட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

மாநிலம் முழுவதும் பாலின தேர்வை தடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் ஆலோசனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மக்களுக்கு இதுதொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

வெளிநாடுகளில் பரிசோதனை செய்து பாலினத்தை தெரிவிக்கும் இந்தியர்கள் மீது சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டது.

பாலினத்தை கண்டறியும் விதிமீறலில் ஈடுபட்ட 15 ஸ்கேன் மையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலினம் கண்டறிவதை தடை செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் பாலின விகிதம் உயர்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2021-22-ஆம் ஆண்டில் தொள்ளாயிரத்து 34-ஆக இருந்த பாலின விகிதம், தற்போது தொள்ளாயிரத்து 41-ஆக உயர்ந்துள்ளது என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில மேற்பார்வைக்குழுவை வலுப்படுத்துவதன் மூலம், பெண் சிசு கொலைகள் குறைந்து, பெண்களின் பாலின விகிதம் மேம்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட புதிய ரயில்வேத் திட்டங்கள் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் She Mart திட்டம்

போன்றவற்றை வரவேற்பதாக செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***(Sound Byte — பயனாளிகள் — 56 Sec.)***

<<<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரியில் மூன்று நவீன புதிய பயணிகள் படகுகள் இயக்குவதற்கு கோவா கப்பல் கட்டும் தளத்திற்கு சென்று, கொள்முதல் செய்யப்பட உள்ள படகுகளின் கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று ஆய்வு செய்தார்.

---------------

தூத்துக்குடி மத்திய கடல்மீன்வள ஆராய்ச்சி நிலைய நிறுவன தினத்தையொட்டி, அந்நிலையத்தில், கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல்வளம் குறித்து நடத்தப்படும் ஆராய்ச்சிகள் பற்றி மாணவ, மாணவிகளுக்கு விளக்கப்பட்டது.

------------------

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே கண்டுபிடிக்கப்பட்ட அரியவகை எறும்புத் தின்னியை வனத்துறையினர் மீட்டனர்.

<<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.**

**வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.**

---------------------

**பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் தேவிகா சிகாக் 48 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.**

----------------

**ஸ்குவாஷ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் அனாகத் சிங் 19-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.**

---------------

**நாமக்கல் மாவட்டம் குமாரப்பாளையத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான ஜுனியர் பேட்மிண்டன் போட்டிகளில், பல்வேறு பிரிவுகளில் தமிழக அணி முதலிடம் பிடித்தது.**

**<<<<<<<<END>>>>>>>**